DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 93 /2023 |
| Deposition of witness | : | PW-7 |
| Name | : | சாமிநாதன் |
| Father's /Husband Name | : | அகோரமணி |
| Village | : | திருப்பாலதுறை |
| Taluk | : | பாபநாசம் |
| Age | : | 37 |
| Occupation | : | மெக்கானிக் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 25th day March 2025.

Accused A2 present. A1 absent and petition U/sec. 317 Cr.P.C (355 BNSS) filed and allowed. App and defense counsel present.

**முதல் விசாரணை:–**

சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 11.45 மணியளவில் சாக்கோட்டை மேம்பாலம் இறக்கம் அருகே உள்ள பாரத் பெட்ரோல் பங்க் அருகே 1414 என்ற பேருந்தை ரிப்பேர் செய்வதற்காக நான் சென்றிருந்தேன். அந்த பேருந்தின் ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல இயலும். (1வது எதிரி இன்று ஆஜரில்லை, கு.வி.மு.ச 317 ன் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 1வது எதிரி அடையாளம் குறித்து மட்டும் ஆட்சேபனை இல்லை என எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.) 2வது எதிரி பேருந்தின் நடத்துநர் ஆவர். நான் பேருந்தை சரி செய்வதற்கு உபகரணங்களை எடுக்க எனது வீட்டுக்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது பெட்ரோல் பங்க் எதிரே கட்டை அருகே பேருந்து நின்றுகொண்டிருந்தது, அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. பேருந்து அருகே வழக்கில் இறந்துபோன நபர் பிரபு இரத்தக்காயத்துடன் கிடந்தார். ஆம்புலன்ஸ் மூலம் பிரபு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். மறுநாள் பிரபு இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

பாரத் பெட்ரோல் பங்க் வழக்கமான மெக்கானிக் நான் இல்லை என்றாலும், போன் மூலம் யாராவது அழைத்தால் செல்வேன் என்றாலும் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிகளில் யார் ஓட்டுநர், நடத்துநர் என்று குறிப்பிட்டு தெரியாது என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./-M.Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.